# WORD OF CHRIST

## கிறிஸ்துவின் வசனம்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3 : 16

மரம் 6. பிப்ரவரி 1998. கனி 7

ஆசிரியர்
ஆ. அர்ஜூணன்

## நீங்கள் தேவனை அல்லது இயேசுவை கண்டிருக்கிறீர்களா? வேதம் சொல்வதை கவனியுங்கள்

1. தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை — 1 யோவா 4 : 12.
2. ஒரு மனுஷனும் என்னைக்கண்டு உயிரோடிருக்கக்கூடாது — யாத் 33:20.
3. அவர் என் அருகில் போகிறார், நான் அவரை காணேன். — யோபு 9:11.
4. நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை — யோவா 5: 37.
5. தேவனிடத்திலின்று வந்தவரை தவிர வேறொருவரும் பிதாவைக் கண்டதில்லை — யோவா 6 : 46.
6. நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம் — 11 கொரி 5 : 16.
7. நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம் — 11 கொரி 5 : 7.
8. விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. — எபி 11 : 1.
9. காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள். யோவா 20:29.
10. அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூருகிறீர்கள் — 1 பேது 1 : 8.

இப்படியிருக்க நீங்கள் தேவனைக் கண்டேன் என்று சொன்னால் இவ்வசனங்கள் பொய்யா?

''ஆதலால் கர்த்தருக்குள் நான் உங்களுக்கு சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றபுற ஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறது போல நீங்கள் இனி நடவாமல் இருங்கள்'' எபே. 4 : 17.

### சிந்தனைக்கு

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களை
கிறிஸ்துவர்கள் என்று வேதம் சொல்லுகிறது. (அப். 11 : 26)

அதேபோல்
கிறிஸ்துவின் சபைக்குச் சொல்லுகிறவர்களை கிறிஸ்துவின்
சபையார் என்று வேதம் சொல்லுகிறது. (ரோம 16 : 16)

இதற்கு விரோதமாகச் சென்றால்
நீ ஒரு வேத புரட்டன் என்று வேதம் சொல்லுகிறது.
(தீத். 3 : 10)

Published by
**WORLD LITERATURE PUBLICATIONS,**
Post Box. 5,
BATLAGUNDU - 624202.
INDIA.

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 6 பிப்ரவரி 1998 கனி 7


ஆசிரியவுரை

## சோர்ந்து போகாதிருங்கள்
## Not to Be Faint

மனிதனுடைய வாழ்க்கையில் அவன் சோர்ந்து போவதற்கு பல காரணங்கள் உண்டு. அவைகளில் சில நம்பிக்கை இல்லாமை, தேவனைத் தேடாமை, சுய விருப்பம் நிறைவேற காத்திருக்குதல், வேத வசனத்தை ஏற்றுக்கொள்ளாமை, வேதத்தைத் தவறாக புரிந்து கொள்வது, தான் தெரிந்து கொண்ட சபைக்குச் செல்வது, கெட்ட சிந்தை, தவறான உறவு முறை, தீய பழக்க வழக்கங்கள், பேய்த்தனம் போன்றவைகள் அவனது வாழ்க்கையில் சோர்வைக்கொண்டு வந்து விடுகிறது. ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டு செயல்படும் போது ஒருக்காலும் சோர்ந்து போகான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறும் போது "நான் சாந்தமும், மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" மத் 11 : 29. சோர்வில்லாமல் வாழ ஆண்டவருடைய உபதேசத்தைக் கற்றுக்கொண்டு அதின்படி நடக்க வேண்டும்.

சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண ஒரு உவமையை நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். "ஒரு பட்டணத்தில் ஒரு நியாயாதிபதி இருந்தான், அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷனை மதியாதவனுமாயிருந்தான். அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள்; அவள் அவனிடத்தில் போய்: எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணினாள். வெகுநாள் வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்து பின்பு அவன் : நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்ய வேண்டுமென்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான் என்றார்.

பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப் பாருங்கள், அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? என்றார்" லூக் 18 : 2-7. இந்த உவமையிலிருந்து நாம் கற்றுக்கொள்கிற காரியம் என்ன? தொடர்ந்து சோர்ந்து போகாது ஜெபிக்கும் போது தேவன் நமக்கு இரங்கி உதவி செய்வார் என்ற நம்பிக்கையில் உறுதியாயிருக்க வேண்டும் என்பதே.

பல வருடங்களாக ஜெபிக்கின்றேன் இன்னும் எனக்கு தேவன் உதவி செய்யவில்லையே, என்னுடைய தேவைகள் சந்திக்கப்படவில்லையே என்ற கவலையோடு நீங்கள் இருக்கலாம். எச்சூழ்நிலையில் நீங்கள் இருந்தாலும் சோர்ந்து போகாது உறுதியாய் தரித்திருந்து ஜெபியுங்கள். அவருடைய சித்தத்தின்படி ஜெபிக்கக் கற்றுக்கெள்ளுங்கள். இடைவிடாமல் ஜெபியுங்கள் என்றால் சங்கிலி ஜெபம் என்று சொல்லி வீண் வார்த்தைகளால் அலப்பாதேயுங்கள் கொலோ 4 : 12. "ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள்" ரோம 12 : 12. உறுதி என்றால் ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நிலைத்திருப்பது. மேலும் "எச்சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்" எபே. 6 : 18. தேவன் ஏற்ற காலத்தில் நன்மையானதைத் தருவார்.

இயேசுவின் பின்னே பசியை அறியாது குடும்பத்தோடு ஜனங்கள் அவருடைய போதகத்தைக் கேட்டுக் கொண்டே அவர் பின்னர் கால்நடையாய்ச் சென்றனர். அப்பொழுது "இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்து ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் என்னிடத்தில் மூன்று நாள் தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள்; இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை, வழியிலே சோர்ந்து போவார்களே என்றார்" மத் 15 : 32. பாருங்கள்! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்களின் தேவைகளை அறிந்து பட்டினியாய்அனுப்பிவிடாமல் சோர்ந்து போகாதிருக்க திருப்தியான ஆகாரத்தைக் கொடுத்தார்.

ஆண்டவரின் வழியில் நடக்கும் போது சோர்வுகள் வரலாம். "சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்" என்று ஏசா. 40 : 29ல் வாசிக்கின்றோம். இப்படி சோர்ந்து போகிற நம்மை பெலப்படுத்துகிறவர் ஒருவர் இருக்க நாம் ஏன் சோர்ந்து போக வேண்டும். "கர்த்தருக்குக் காத்திருக்கிற வர்களோ புது பெலனடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படை யார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்" ஏசா 40 : 31. கர்த்தருக்குக் காத்திரு அவர் உன் வேண்டுதலை கேட்டு ஆசீர்வாதத்தை அனுப்புவார்.

சோர்வுகள் வரும்போது சில வேளைகளில் நம் சேஷ்டப் புத்திர பாகத்தை விற்று போடுகிறோம். ஏசாவும் அப்படித்தான். "அந்த சிவப்பான கூழிலே நான் சாப்பிட கொஞ்சம் தா, இளைத்திருக்கிறேன் என்றான்...இதோ, நான் சாகப்போகிறேனே, இந்த சேஷ்ட புத்திர பாகம் எனக்கு என்னத்திற்கு என்றான்" ஆதி 25 : 30-32. இப்படிச் சொல்லி சேஷ்டபுத்திர பாகத்தை யாக்கோபுக்கு விற்றுப்போட்டான். எபிரேய ஆசிரியர் இவனைக் குறித்துச் சொல்லும்போது ஒரு வேளை போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப் போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" எபி. 12 : 16. தங்களுடைய சேஷ்ட புத்திர பாகத்தை அநேகர் விற்று குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிறார்கள். இன்னும் பலர் விபச்சாரத்திற்கும் பெரும் தீனிக்கும் அடிமையாகிவிடுகிறார்கள்.

கிறிஸ்துவின் சரீரமான சபையின் வளர்ச்சிக்காக பவுல் சோர்ந்து போகாது கப்பற் பயணத்தில் பதினாலு நாளாய் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியாயிருந்தான். அதுமட்டுமா? யூதர்களால் ஒன்று குறைய நாற்பது அடியாக ஐந்துதரம் அடிபட்டான், மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டான், ஒருதரம் கல்லெறியுண்டான், மூன்று தரம் கப்பற் சேதத்தில் இருந்தான், கடலிலே ஒரு இராப் பகல் முழுவதும் போக்கினான். இவை யெல்லாவற்றினின்றும் கர்த்தர் அவனை விடுதலையாக்கினார். ஆகையால் "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" என்றான் பிலி. 1 : 21. நீங்களும் நானும் என்ன கஷ்டங்கள் வந்தாலும் சோர்ந்து போகாது, பாடுகளோடு தேவனைத் துதித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்வோமாக!

எனக்கு வந்த துன்பங்கள் ஒருவருக்கும் வரக்கூடாது. நான் அவ்வளவு கஷ்டப்பட்டேன் என்பார்கள். வேதம் சொல்வதை நீங்கள் கவனிக்கவில்லையா? "நீ காலாட்களோடே ஓடும் போதே உன்னை இளைக்கப்பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்ன செய்வாய்?" எரே. 12 : 5. பிரிய நண்பரே! பாடுகள், பிரச்சனைகள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் இருக்கக்கூடிய ஒன்றுதான். அதை பெரிதாக்கிக் கொண்டு சோர்ந்து போனால் எப்படி? சாலமோன் குறிப்பிடும்போது "ஆபத்துக் காலத்திலே நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது" நீதி 24 : 10 ஆபத்திலேதான் உற்சாகமாக இருக்கவேண்டும். சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோவைப் போல் தேவன் தப்புவிக்க வல்லவர் என்ற நம்பிக்கையுடனிருக்க வேண்டும்.

ஆகையால் பிரியமானவர்களே, சோர்ந்து போகாமல் "இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்" லூக். 21 : 36. "இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள், வாலிபரும் இடறி விழுவார்கள்'' ஏசா. 40 : 30. "தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்மாவுக்கும் கர்த்தர் நல்லவர்" புல 3 : 25. சோர்ந்து போகாது கர்த்தருக்குக் காத்திருங்கள். பவுல் குறிப்பிடும் போது... "நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்து போகிறதில்லை. வெட்கமான அந்தரங்கக் காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தை புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப் பண்ணுகிறோம்" 11 கொரி. 4 : 1-2. நாமும் இப்படி குற்றமற்றவர் களாய் வாழ்ந்தால் சோர்ந்து போகாதிருப்போம்.

இயேசு கிறிஸ்து ''தமக்கு முன் வைத்திருந்த சந்தோசத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்" எபி. 12 : 2-3. கர்த்தர் உங்களுக்கு சோர்ந்து போகாதிருக்கப் பெலன் கொடுப்பாராக!

## உங்கள் நகரத்தில் அல்லது கிராமத்தில் கிறிஸ்துவின் சபையை நீங்கள் தொடங்குவது எப்படி?

## How to start the Church of Christ in your Town or Village?

கிறிஸ்துவின் சபை இல்லாத ஒருநகரம் அல்லது கிராமத்தில் நீங்கள் வசித்துக் கொண்டிருக்கக்கூடும். நாமகரண சபைகளும், மனிதன் உண்டாக்கிய பிற சபைகளும் அங்கு இருக்கலாம். ஆனால் கர்த்தருடைய சபை இன்னும் அங்கு நிறுவப்பட்டிருக்கவில்லை. எனவே, என்ன செய்வது என நீங்கள் திகைக்கிறீர்கள்! அங்கே இருக்கும் ஏதாவது ஒரு சபையில் நீங்கள் அங்கத்தினராகலாமா? அல்லது இப்போதிருக்கும் நிலையிலேயே நீங்கள் தொடரலாமா? கிறிஸ்துவின் சபை உள்ள ஒரு இடத்திற்கு குடி பெயர்ந்து போக முயற்சிக்கலாமா? இந்த முக்கியமான கேள்விகளுக்கு எளிதில் பதில் கிடைக்காமல் இருக்கலாம்.

நான் உங்களுக்கு சில ஆலோசனைகளைக் கூறுகிறேன். கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராவது உங்களுக்கு சாத்தியமே. அதோடு, உங்கள் சொந்த நகரத்தில் அல்லது கிராமத்தில் எங்கிருந்த போதிலும் அங்கே கர்த்தரின் சபையின், ஒரு பிராந்திய சபையை தொடங்குவதில் நீங்கள் முன்னோடியாக இருக்க முடியும். நீங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகள் இதோ :

1. உங்களுக்கென்று ஒரு வேதாகமத்தை வாங்குங்கள். தேவனுடைய விருப்பத்தைச் செய்ய நீங்கள் ஆர்வமாக இருந்தால், ஒரு வேதாகமம் உங்களுக்கு தேவை. வேதாகமப் புத்தகங்கள் இங்கு இந்தியாவில் கிடைக்கின்றன. அது கிடைத்த பின், அதைப் படிக்கவும், கற்றுக்கொள்ளவும் தொடங்குங்கள். இன்றைய மக்களுக்காக கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் சட்டங்கள் அடங்கிய புதிய ஏற்பாட்டின் பகுதியில் தனிக்கவனம் செலுத்துங்கள். இப்படி செய்வதால் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்றும், கர்த்தரின் சபையில் எப்படி ஒரு அங்கத்தினராக இருப்பது, எப்படி ஆராதிப்பது, கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது எப்படி என்றும் நீங்கள் கற்றுக்கொள்வீர்கள்.

2. சத்தியத்திற்கு நீங்கள முதலில் கீழ்படியுங்கள். நீங்கள் கர்த்தரை விசுவாசித்தால், உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு மனம் திரும்பி, மனிதர்களுக்கு முன்பாக கிறிஸ்துவை அறிக்கை செய்து (தண்ணீரில் மூழ்கி திருமுழுக்கு பெற்றால், பின் நீங்கள் இரட்சிக்கப்பட முடியும் (மாற்கு 16:16, மத்தேயு. 10 : 32, அப். 2 : 38) என கர்த்தர் கற்பிக்கிறார். அப்போஸ்தலர்களுடைய நாட்களிலே கிறிஸ்துவுக்குள் மக்கள் எவ்வாறு மனந்திரும்பினார்கள் என்பதைப் பார்க்க அப்போஸ் தலருடைய நடபடிகள் புத்தகத்தையும் படியுங்கள். கர்த்தருக்கு கீழ்படிய நீங்கள் தயாராகி விட்டால், கவி சேஷத்தின் படியாக உங்களுக்கு திருமுழுக்கக் கொடுக்க யாராவது ஒருவரைக் கண்டுபிடியுங்கள். அதிக தண்ணீருள்ள ஓரிரு இடத்திற்கு அவர் உங்களை அழைத்துச் சென்று, உங்கள் பாவங்கள் மன்னிக்கப் படுவதற்காக, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் பெயராலே அவர் உங்களை தண்ணீரில் மூழ்கி திருமுழுக்குக் கொடுக்க ஒப்புக்கொடுங்கள். இப்போது, திருமுழுக்கு பெற்றபடியால் நீங்கள் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராக சேர்க்கப் பட்டு விடுகிறீர்கள். ஏனெனில் இரட்சிக்கப்படுகிறவர்களை கிறிஸ்து அவருடைய சபையில் சேர்க்கிறார் (அப். 2 : 47). நீங்கள் ஒரு கிறிஸ்தவனாகவும் மாறிவிடுகிறீர்கள். (அப். 11 :26)

3. இப்போது உங்கள் வீட்டிலேயே நடத்த ஆரம்பியுங்கள். உங்கள் குடும்ப அங்கத்தினர்களையும், ஆர்வமுள்ள நண்பர் களையும் அதில் பங்குகொள்ள உற்சாகப்படுத்துங்கள். வாரத்தின் முதல்நாளாகிய ஞாயிற்றுக்கிழமை கூடி வர வேண்டும். தேவன் அங்கீகரித்துக்கொள்ளும்படியாக வேத வாசிப்பு (11 தீமோ. 2 : 15), ஜெபம் (அப். 2 : 42), இசைக்கருவியின்றி பாடல் (எபே. 5 : 19) ஆகியவை நடத்தப்பட வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தின் நினைவாக அப்பமும், அவருடைய இரத்தத்தின் நினைவாக திராட்ச ரசமும் கொண்ட கர்த்தரின் பந்தியில் பங்கு பெற வேண்டும். (மத். 26 : 26-28, 1 கொரி. 11). கடையில் திராட்ச ரசம் கிடைக்காவிட்டால் உலர்ந்த திராட்சையை வாங்கி, அவற்றை வெண்ணீரில் கொதிக்கவைத்து அந்தச்சாறை பயன்படுத்தலாம். இறுதியாக உங்கள் வரவுக்குத் தக்கதாக ஏதாவது பணத்தைக் காணிக்கையாகச் செலுத்த வேண்டும். உன்னோடு கூடி வந்திருப்பவர்களும் கொடுக்க விரும்பலாம். இந்த பணமானது நேர்மையாக கணக்கு வைக்கப்பட்டு, ஏழைகளுக்கு உதவவும், கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்பவும் பயன்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட ஆராதனை முறையானது ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தப்பட வேண்டும் (அப். 20 : 7).

4. உங்கள் வீட்டில் மட்டுமல்லாமல், ஒரு வேளை உங்கள் நகரத்தின் அல்லது கிராமத்தின் பிற பகுதிகளிலும் கூட ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் சபை கூடிவர நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். தேவனுக்குக் கீழ்படிய விருப்பம் உள்ளவர்கள் தோன்றும் வரை, இந்தக் கூட்டங்களில் போதிக்கும் ஆராதனைகளை மட்டுமே நீங்கள் நடத்த வேண்டும். பின்னர் அவர்கள் சபை அங்கத்தினர்களான பின்பு தொழுது கொள்ளும் ஆராதனைகளை (ஏற்கனவே கூறியபடி நடத்தலாம். ஆனால் இரட்சிப்படைய என்ன செய்ய வேண்டும் என்றும், புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தினபடி அவர்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாக இருக்கமுடியுமென்றும் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை தோறும் தேவனை அவர்கள் தொழுது கொள்ள வேண்டும் என்றும், கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வேண்டும் என்றும் மக்களிடம் நீங்கள் சொல்ல வேண்டும். இதை நீங்கள் செய்தால் உங்கள் முயற்சிகள் ஆசீர்வதிக்கப்படும்.

5. உங்கள் ஆராதனையிலும், போதிப்பதிலும், வாழ்க்கையிலும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருங்கள். தேவனுடைய சத்தியத்தைப் பரப்ப உங்களால் முடிந்தவற்றைச் செய்யுங்கள். நினைவிருக்கட்டும். நீங்கள் எங்கேயிருக்கிறீர்களோ, அங்கே ஒரு கிறிஸ்தவனாகவும், கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராகவும் இருக்கவேண்டும். அதற்குத் தேவையானதெல்லாம் கர்த்தருக்குக் கீழ்படிந்து நடப்பதே.

**J. C. CHOAT**

தமிழில் : எஸ். எஸ். ராஜன்

## ஜனவரி மாத இதழில் வேத அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள்

1. **N.** தானியேல் தமிழ்வானன் - மேல் விசாரம்
2. **J.** மேரிஎலிசபேத் கலைவாணி - வத்தலக்குண்டு

## ஜனவரி மாத இதழின் விடைகள்

1. கற்பனையை கைக்கொள்ளுகிறவன்பிர 8:5
2. பவுல் 11 தீமோ 3 : 11
3. சிட்சிக்கிறார் எபி. 12 : 10
4. பிலதெல்பியா வெளி 3 : 7
5. யெகூ 11 இராஜா 9 : 22
6. கானான்
7. சந்தோஷப்படுங்கள்
8. தன்சுயசரீரத்திற்கு
9. கர்த்தருக்கே
10. ஆபிரகாம்

## இம்மாத வேத அறிவுப் போட்டி

1. எழுபது கழுதைகளின் மேல் ஏறும் குமாரரையும், பேரப் பிள்ளைகளையும் உடையவன் யார்?
2. ஆபத்துக் காலத்தில் நீ சோர்ந்து போவாயானால் உன் பெலன் எப்படிப்பட்டது?
3. கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் எப்படியுள்ளவனாய் இருக்கிறான்?
4. வேத பிரமாணத்துக்கு விரோதமாய் தேவனை சேவிக்கும்படி மனுஷருக்குப் போதிக்கிறான் என்று யாரைப் பார்த்து யார் சொன்னார்கள்?
5. அன்பு எதன் நிறைவேறுதலாய் இருக்கிறது?
6. யெகோவா சாலோம் என்று பெயரிடப்பட்ட பலிபீடம் எந்த ஊரில் இருக்கிறது?
7. எருசலேமுக்குச் சமீபமாய் ஏறக்குறைய இரண்டு மைல் தூரத்தில் இருந்த ஊர் எது? அங்கு யாரை இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பினார்.
8. கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்து அதிசயப்பட்டு, விசுவாசித்த அதிபதி யார்?
9. நீங்களே எவரின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறீர்கள்?
10. அந்நிய பாஷை மொழி பேசும்போது அர்த்தஞ் சொல்கிறவனில்லாவிட்டால் சபையிலே பேசலாமா?

[illegible]

## சகோதரிகளின் பங்கு
## Women's Role

J. குளோரி அர்ஜுனன்

அன்பான சகோதரிகளே,

இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில் சகோதரர்களைக் காட்டிலும், சகோதரிகளின் எண்ணிக்கைதான் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டே வருவதாகக் கருதப்படுகிறது. இதைக் கேள்விப்படுகிற சகோதரிகளாகிய நமக்கு இது மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. வேதாகமத்திலும் கூட ஆவிக்குரிய ரீதியில் சில சகோதரிகளின் ஜீவியத்தை உற்றுநோக்குவது நமக்கு இன்னும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கும்.

<u>தேவலாயத்தை விட்டு நீங்காமல்</u>, அதாவது தேவ சமூகத்தை விட்டுவிலகாமல், சபை கூடி வருதலை விட்டுவிடாமல் இருப்பது தேவனுக்கு ஏற்றதாய் இருக்கிறது. இவ்விதமாகவே அன்னாள் என்ற தீர்க்கதரிசி அதிக வயது சென்றவளாய் இருந்து, ஏறக்குறைய என்பத்து நாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல்....ஆராதனை செய்துகொண்டிருந்தாள் (லூக் 2 : 36, 37)சகோதரிகளாகிய நாம் இவளைப் போல் தேவனை ஆராதிப்பதில் உறுதியாயிருப்பது அவசியம்.

<u>தேவனுக்குச் செலுத்துவதில் உதாரத்துவம்</u>: பாருங்கள், ஒரு ஏழை விதவையைக் குறித்து ஆண்டவர் இயேசு சாட்சி பகருகிறார்.....இவளோ, தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார். (லூக் 21 : 1-4). நம்மில் அநேகர் அவள் போட்டது. 2 காசுதானே என நினைக்கலாம். அவளிடம் இருந்ததே அந்த 2 காசுதான் என்பதை மறந்துவிட வேண்டும். இவளைப் போல நமக்கு உண்டானதெல்லாம் கர்த்தருக்கே, என நினைத்து செயல்படுவோமாக!

தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம்: ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள் என லூக் 8: 2, 3ல் வாசிக்கிறோம். நமக்காக ஜீவனையே ஈந்த நம் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய நமக்குண்டான எதையும் இழக்கத் தயாராக இருக்கவேண்டும்.

நற்கிரிகைகளையும், தருமங்களையும் செய்தல்:

தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள், அவள் நற்கிரியைகளையும், தர்மங்களையும் மிகுதியாய் செய்து கொண்டு வந்தாள் (அப். 9 : 36). இவ்விதமாய் நாமும்கூட உலகப் பொருட்களால் சிநேகிதரை சம்பாதித்து இயேசுவின் அன்பைப் பகிர்ந்துகொள்வோமாக.

ஊழியருக்காக ஜெபித்தல்:

பேதுரு சிறைச்சாலையில் காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஜெபம் பண்ணினார்கள். (அப். 12 : 5). மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் சபைக் கூடிவருவதற்கு தன் வீட்டையே கொடுத்திருந்தாள். அங்கே அநேகர் கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தனர். (அப் 12 : 12). இவர்களது ஜெபத்தைக் கேட்டு பேதுருவை கர்த்தர் விடுவித்தார். நாமும் நமது ஊழியருக்காக ஜெபிப்போம். அது மட்டுமல்லாது பெபேயாள் என்ற சகோதரி அநேகருக்கும், பவுலுக்கும் ஆதரவாயிருந்தாள் (ரோம. 16 : 1, 2). பிரிஸ்கில்லாள் என்ற சகோதரி தன் குடும்பத்தோடு பவுலின் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தார்கள். (ரோம. 16 : 3, 4). இவ்விதமாய் ஊழியர்களுக்காக பிரயாசப்பட்ட மரியாளையும், கர்த்தருக்குள் பிரயாசப்பட்ட திரிபேனாளையும், திரிபோசாளையும், பெர்சியாளையும், ரோம. 16 : 6, 12ல் காண்கிறோம். கிறிஸ்துவினிடத்தில் அன்புக்கூருகிற நாம் இவர்களைப் போல கிறிஸ்துவின் ஊழியர்களைத் தாங்குவோமாக. அப்படி செய்யும்போது கர்த்தரை மகிமைப்படுத்துகிறவர்களாய் இருப்போம்.

மணவாளனுக்கு எதிர்கொண்டிருக்கும் சகோதரிகளாய் இருப்போம்:

ஆம். நம் மணவாளனாகிய இயேசு கிறிஸ்து மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார் (வெளி 22 : 20). புத்தியுள்ள ஐந்து கன்னிகைகள் மணவாளன் வரக் காத்திருந்தனர். இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று... மணவாளன் வந்து விட்டார், ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூட கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது (மத். 25: 6, 10). நாமும் இந்தப் புத்தியுள்ள கன்னிகைகளைப் போல் நம் மணவாளனாகிய இயேசுகிறிஸ்து வரக்காத்திருந்து அவரோடு கூட பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்போமாக.

---

நான் யார் ?
**Who Am I**

சென்ற இதழின் விடை:
மாற்கு என்னும் பேர் கொண்ட யோவான்
(அப். 12 : 12-17, 25, 13 : 13, 15 : 36-41, 11 தீமோ. 4 : 11, மாற். 14 : 51, 52).

MONTHLY MAGAZINE
Regd. No. 84661 - 92
Postal Regn. No. TN/DDL/19.

Edited by B. Arjunan on behalf of Church of Christ
2.2.102-D/5, Rajan Nagar,
Batlagundu and Printed at
Bharathi Computer Offset Press
for Shanthi Printers Main Road,
Batlagundu - 624202.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.

ஞாயிறு காலை 9-00 மணி

வியாழன் மாலை 6-45 மணி



கிறிஸ்துவின் சபை,
2.2.102-D/5, ராஜன் நகர்,
வத்தலக்குண்டு-624202.
திண்டுக்கல் மாவட்டம்.
Phone (04543) 23278.

From
WORD OF CHRIST,
Post Box No. 5,
BATLAGUNDU - 624202.
S. India.

To